இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 26-08-2025

# கருத்தியலை உள்ளடக்கிய தேர்தல்!

குடியரசு துணைத் தலைவர் பதவிக்காக நடக்கும் தேர்தலை, 'இரண்டு கொள்கைகளுக்கு இடையிலான போர்' என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். உண்மைதான். அது இரண்டு விதமான கொள்கையாளர்கள் பிரிந்து நின்று மோதும் தேர்தலாகத்தான் இருக்கிறது.

பா.ஜ.க. சார்பில் சி.பி.ராதாகிருஷ்ணன் வேட்பாளராக நியமிக்கப்பட்டு இருக்கிறார். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவரை வேட்பாளராக நிறுத்திவிட்டு, 'தமிழராகிய இவரை தி.மு.க.வும் ஆதரிக்க வேண்டும்' என்று சிலர் பேசியது கேலிக்குரியது ஆகும். இதற்கு மிகச் சரியான பதிலடியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்துள்ளார்கள்.

**"தமிழ்நாட்டுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் செய்துவிட்டு, 'தமிழர்' என்ற முகமூடியை அணிந்து கொண்டு ஆதரவு கேட்கிறார்கள். இது எல்லாம் பழைய காலத் தந்திரங்கள். தனிமனிதர்களை விட தத்துவங்கள்தான் அரசியலை வழிநடத்தும். தனிமனிதர்கள் என்பவர்கள் வெறும் பிம்பங்கள்தான். அதனால், எந்தக் கருத்தியல் மக்களுக்கான, மக்கள் நலனுக்கான கருத்தியலோ அதைத்தான் ஆதரிக்க வேண்டும்"** - என்று நெத்தியடி அடித்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

பா.ஜ.க. தலைமையானது தமிழ்நாட்டுக்கு இழைத்துவரும் கொடுமைகளின் பட்டியல் மிகமிக நீண்டது ஆகும்.

* **தமிழ்நாட்டின் நிதி உரிமைகள், ஜி.எஸ்.டி. கொள்கை மூலமாகப் பறிக்கப்படுகிறது.**
* **அனைத்திலும் வளர்ந்த தமிழ்நாட்டை ஒன்றிய அரசு பல்வேறு வழிகளில் புறக்கணிக்கிறது.**
* **தமிழ்நாட்டில் இருந்து வசூலிக்கப்படும் வரி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தரப்படுவது இல்லை.**
* **தமிழ்நாட்டுக்கான சிறப்புத் திட்டங்கள் இல்லை.**
* **பள்ளிக் கல்விக்கான ரூ.2000 கோடி நிதி இன்றுவரை மறுக்கப்படுகிறது.**
* **ஒன்றிய அரசின் திட்டங்களுக்கும் தமிழ்நாடுதான் நிதி தந்து நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறது.**
* **நீட் தேர்வு மூலமாக அடித்தட்டு மாணவர்களின் மருத்துவக் கல்விக் கனவு சிதைக்கப்படுகிறது.**
* **தேசியக் கல்விக் கொள்கையானது இந்தித் திணிப்புக் கொள்கையாக மட்டுமே இருக்கிறது.**
* **தமிழ் வளர்ச்சிக்கு ஒதுக்கும் நிதியை விட சமஸ்கிருதத்துக்கு தரும் நிதி 17 மடங்கு அதிகமாக இருக்கிறது.**
* **தமிழர்களின் வரலாற்றுப் பெருமை வெளியில் வந்துவிடக் கூடாது என்பதற்காகவே கீழடி அறிக்கையை வெளியில் விடாமல் மறைக்கிறார்கள்.**
* **இவை அனைத்துக்கும் மேலான தொகுதி மறுவரையறை என்ற பெயரால் தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க நினைக்கிறார்கள். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வளவையும் செய்து விட்டு, 'தமிழரை' நிறுத்தியிருக்கிறோம் என்றால் ஏமாறுவதற்கு தமிழர்களும், தமிழ்நாடும் முட்டாள்கள் அல்ல. முனை மழுங்கியும் கிடக்கவில்லை.**

தமிழ்நாட்டின் நியாயமான பல கோரிக்கைகளுக்குச் செவி சாய்க்காமல், ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டிற்கு அநீதி இழைத்து வருகிறது. ஆளுநர்கள் மூலமாக இணை அரசாங்கம் நடத்தி, மாநில அரசுகளின் செயல்பாட்டை முடக்கி, உயர்கல்வி நிறுவனங்களை வலுவிழக்கச் செய்யும் செயல்களிலும் ஈடுபட்டு வருகிறது. சுதந்திர தினத்தன்று கூட, தமிழ்நாடு அரசை மிகமிகக் கொச்சைப்படுத்தி ஆளுநர் ரவி பேசினார். இப்படி 'குட்டியை' விட்டு ஆட்டம் காட்டிக் கொண்டு, தி.மு.க.வின் ஆதரவைக் கேட்பது நகைப்புக்குரியது மட்டுமல்ல அசிங்கமானது.

மாநில உரிமைகள் பறிப்பு, அதிகாரக்குவிப்பு, வெறுப்பு பிரச்சாரம் தீவிரமாக முன்னெடுப்பு, இடைவிடாத இந்தி - சமஸ்கிருதத் திணிப்பு என அரசியலமைப்பைக் குழிதோண்டிப் புதைக்கும் அநீதிகளுக்கு எதிராக தி.மு.க. தொடர்ந்து தீவிரமாகக் குரலெழுப்பி வருகிறது. இதையெல்லாம் நீதியுடனும் நேர்மையுடனும் பரிசீலித்து பார்க்கக் கூடிய ஒருவர் தேவை என்பதால்தான் சுதர்சன் அவர்களை கழகம் ஆதரிக்கிறது.

**"நான் எந்தக் கட்சியையும் சேர்ந்தவன் இல்லை. நான் அரசியலமைப்பைப் பின்பற்றும் அரசியல்வாதி. இந்த நாட்டுக்குச் சேவை செய்வது ஒன்றுதான் என்னுடைய நோக்கம். குடியரசு துணைத் தலைவர் அலுவலகம் என்பது அரசியல் கட்சி அலுவலகம் அல்ல"** என்று சொல்லி இருக்கிறார் 'இந்தியா' கூட்டணியின் வேட்பாளரான உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் சுதர்சன் அவர்கள்.

அவரை 'நக்சல்' என்று சொல்லி இருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. அடுத்தவர் மீது கறைபூசுவது காவிகளுக்கு இயல்பானது தானே? அமித்ஷா மீதான பழைய வழக்கு விபரம் என்ன என்று சுதர்சன் விளக்க ஆரம்பித்தால் என்ன ஆகும்?

மாவோயிஸ்ட்டுகளுக்கு எதிராக காவல் படைகள் நடவடிக்கைகள் எடுக்காமல் 'சல்வார் ஜுடும்' என்ற பழங்குடி அமைப்பை உருவாக்கி அவர்களை வைத்து மோதலை உருவாக்கினார்கள். இதற்கு எதிராக 2011 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் வழக்கு வந்தது. உச்சநீதிமன்ற நீதிபதிகளான சுதர்சன் ரெட்டி, எஸ்.எஸ்.நிஜ்ஜார் அடங்கிய அமர்வு, 'பழங்குடி இளைஞர்களை அரசு பயன்படுத்துவது சட்டவிரோதமானது' என்று தீர்ப்பளித்தது. இதை வைத்து உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்தவரை 'நக்சல்' என்று சொல்லலாமா? 'முதலில் இந்தத் தீர்ப்பை முழுமையாகப் படியுங்கள்' என்று பதில் அளித்திருக்கிறார் சுதர்சன் அவர்கள்.

அரசமைப்பு சட்டத்துக்காக, ஜனநாயக உரிமைகளுக்காக, மனித உரிமைகளுக்காக, சமத்துவத்துக்காக சுதர்சன் பேசுவது அமித்ஷாவுக்கு எரிச்சலாக இருக்கிறது. அதனால்தான் 'நக்சல்' என்று திசை திருப்புகிறார். 'தமிழரை நிறுத்தி இருக்கிறோமே?' என்று ஏதோ பெரிய சாதனையைச் செய்து விட்டதைப் போன்று தமிழ்நாட்டுக்கு வந்து சிரிக்கிறார் அமித்ஷா.


ராஜஸ்தான் தேர்தலுக்காக ஜெகதீப் தன்கரைக் கொண்டு வந்தார்கள். தேர்தல் முடிந்ததும் அவரைக் கழற்றி விட்டார்கள். அப்படித்தான் தமிழ்நாடு தேர்தலுக்காக 'தமிழரை' நிறுத்துகிறார்கள் என்பதை அறியாத மாநிலம் அல்ல தமிழ்நாடு. 'தலித்' ஆதரவுக்காக ராம்நாத் கோவிந்தை கொண்டு வந்ததும், அதனை அவமரியாதை செய்ததையும் பார்த்தோம். வடகிழக்கு மாகாண அரசியலுக்காக முர்முவைக் கொண்டு வந்து அவருக்கு உரிய மரியாதை தராததையும் பார்த்துத்தான் வருகிறோம்.

**பச்சை ஆர்.எஸ்.எஸ். காரரான ஜெகதீப் தன்கரையே பழிதீர்த்துக் கொண்டு விழுங்கிவிட்டது பா.ஜ.க. பூதம்! இதில் 'தமிழர்' முகமூடி எல்லாம் மூன்றாவது நிமிடத்தில் கிழித்தெறியப்பட்டு விடும் என்பதே கடந்த கால பா.ஜ.க.வின் வரலாறு நமக்குச் சொல்லும் பாடம் ஆகும்.**





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ் இணையக் கல்விக்கழகம் எதிரில் அமைந்துள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், சென்னை இதழியல் நிறுவனத்தின் சிறப்பு பணி அலுவலர் எஸ்.ஏ.ராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், மாநில திட்டக்குழு செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் நிருவாகக் குழுத் தலைவர் என்.ரவி, தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் துணைத் தலைவர் இமயம், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் டிராட்ஸ்கி மருது, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைத் துறையைச் சார்ந்த நக்கீரன் கோபால், திருமாவேலன், கார்த்திகை செல்வன், சுரேஷ் குமார், குணசேகரன், சமஸ், திருமதி. லட்சுமி சுப்பிரமணியன், காமராஜ், நிருபன் சக்கரவர்த்தி உள்ளிட்ட ஊடகவியலாளர்கள், வழக்கறிஞர் காந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.08.2025) சென்னை, கோட்டூர்புரத்திலுள்ள முதலமைச்சரின் உதவி மையத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், முதலமைச்சரின் தனிப் பிரிவு சிறப்பு அலுவலர் திருமதி ஜெயஷீலா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ஊடகக் கல்வி மேம்பாட்டிற்காக

# "சென்னை இதழியல் நிறுவனம்!"

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக. 26 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.8.2025) சென்னை, கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ் இணையக் கல்விக்கழகம் எதிரில் அமைந்துள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தைத் தொடங்கி வைத்தார்.**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், இதழியல் துறையில் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஊடகக் கல்வி மேம்பாட்டுக்கு ஒரு முதன்மையான கல்வி நிறுவனத்தை நிறுவி, அதன்மூலம் ஆர்வம் மிகுந்த இளம் திறமையாளர்களை ஊக்குவிக்கவும், இதழியல் மற்றும் ஊடக ஆய்வியலில் தரமான கல்வியை வழங்கிடும் வகையில், இதழியல் மற்றும் ஊடகவியல் கல்வி நிறுவனம் (Institute of Journalism and Media Studies) இக்கல்வியாண்டு முதல் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, இதழியல் துறையில் ஆர்வமுள்ள இளைய தலைமுறையினரை ஊக்குவிக்கும் நோக்குடனும், தற்போது வளர்ந்து வரும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, ஊடகக் கல்வியை வழங்குவதற்காகவும், தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைய தலைமுறையினருக்கு குறைந்த கட்டணத்தில், ஓர் ஆண்டு இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பை (Post Graduate Diploma in Journalism) வழங்குவதற்காகவும் சென்னை, கோட்டூர்புரத்தில் அண்ணா நூற்றாண்டு நூலகம் அருகில் தமிழ்நாடு அரசு சார்பில் சென்னை இதழியல் கல்வி நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை இதழியல் கல்வி நிறுவனத்திற்காக 7.75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தில் இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பு (Post Graduate Diploma in Journalism) இந்த கல்வியாண்டு முதல் (2025 2026) தொடங்கப்படுகிறது. இங்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழியிலும் பயிற்றுவிக்கப்படுகிறது.

இந்நிறுவனத்தில் அச்சு, தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய ஊடகங்களில் பணி புரிவதற்கான திறமையை வளர்த்துக்கொள்ளும் வகையில் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சர்வதேச கல்வி நிறுவனங்களுடன் இந்நிறுவனம் ஒப்பந்தம் செய்துகொள்ள உள்ளது. இந்த அனுபவம், நொடிக்கு நொடி மாறிவரும் தொழில்நுட்ப யுகத்தில் அடுத்த தலைமுறையினர் தங்களைத் தயார் செய்துகொள்ள உதவும்.

இதழியல் கல்வியை சிறப்பாக வழங்கவுள்ள, சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தை கோட்டூர்புரத்தில் முதலமைச்சர் அவர்கள் நேற்று தொடங்கி வைத்து, பார்வையிட்டார். தொடர்ந்து, இக்கல்வி நிறுவனத்தில் இதழியல் முதுநிலை பட்டயப் படிப்பில் முதலாமாண்டு சேர்க்கை பெற்ற மாணவ, மாணவியர்களிடம் முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடினார்.

இந்த நிகழ்ச்சியில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், சென்னை இதழியல் நிறுவனத்தின் சிறப்பு பணி அலுவலர் எஸ்.ஏ. ராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், மாநில திட்டக்குழு செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தின் நிருவாகக் குழுத் தலைவர் என்.ரவி, தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் துணைத் தலைவர் இமயம், தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் தலைவர் டிராட்ஸ்கி மருது, தொலைக்காட்சி மற்றும் பத்திரிகைத் துறையை சார்ந்த நக்கீரன் கோபால், திருமாவேலன், கார்த்திகை செல்வன், சுரேஷ் குமார், குணசேகரன், சமஸ், திருமதி. லட்சுமிசுப்பிரமணியன், காமராஜ், நிருபன் சக்கரவர்த்தி, வழக்கறிஞர் காந்தி உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை — கோட்டூர்புரத்திலுள்ள

# முதலமைச்சரின் உதவி மையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு!

**சென்னை, ஆக. 26 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.08.2025) சென்னை, கோட்டூர்புரத்திலுள்ள முதலமைச்சரின் உதவி மையத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு, அதன் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.**

முதலமைச்சரின் உதவி மையம், 1100 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன், சென்னை, கோட்டூர்புரத்தில் ஏப்ரல் 2024முதல் செயல்பட்டுவருகிறது. இம்மையம் தினமும் 16 மணி நேரம், மூன்று முறை மாற்றுப் பணிகளில் (shifts), காலை 6:00 மணி முதல் இரவு 10:00 மணி வரை, 120 பணியாளர்களுடன், வாரத்தின் ஏழு நாட்களும் தொடர்ச்சியாக செயல்பட்டு வருகிறது.

மேலும், இ-சேவை தொடர்பான சேவைகளின் கோரிக்கைகளை கையாள தனியாக 20 பிரத்யேக இருக்கைகள் கொண்ட மற்றொரு உதவி மையமும் முதலமைச்சரின் உதவி மையத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

இம்மையத்திற்கு நேற்று வருகை தந்த முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சரின் உதவி மையத்தின் பணிகளின் நடைமுறைகள் குறித்து அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ், மனுக்களின் தீர்வு நிலையினை தர மதிப்பீடு செய்யும் அலுவலர்களிடம் தீர்வின் தன்மை குறித்து முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்து, உரிய அறிவுரைகளை வழங்கினார். இந்த மையத்தில், நாளொன்றிற்கு ஏறத்தாழ 13,000க்கும் மேற்பட்ட அழைப்புகள் வரப்பெறுகிறது. மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்களில், தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் தரத்தினை ஆய்வு செய்ய, தினமும் தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட பயனாளிகளிடம் கருத்துகள் கேட்கப்பட்டு, அவர்களது மனுக்கள் முறையாக தீர்வு செய்யப்பட்டதா என்று தர மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. இப்பணிக்காக நாளொன்றிற்கு சுமார் 2,800 அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை இத்திட்டத்தில் மனு செய்து பயன்பெற்ற 77,000 பொது மக்களிடம் பின்னூட்டம் பெறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள். பொதுமக்களிடம் கனிவாக பேசி, அவர்களின் கோரிக்கைகளை உடன் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி, விவரங்களை அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமென்று அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், முதலமைச்சரின் தனிப் பிரிவு சிறப்பு அலுவலர் திருமதி ஜெயஷீலா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.